# IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI

MCOP.No.258/2016 Date: 25.04.2025.

PW2- செல்வம்

சாட்சி மீண்டும் முன்னிலையானதின் பேரில் 2 ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:

எனக்கு சாட்சி சம்மன் வரவில்லை. மனுதாரர் கேட்டுக்கொண்டதால் சாட்சி சொல்ல வந்தேன். மனுதாரரும், நானும் ஒரே ஊர் தான். அவர்களை எனக்கு 20 வருடங்களாக பழக்கம். நான் பொங்கலுக்கு கரும்பு வியாபாரம் செய்ததற்கான ஆதாரம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். கேசவன் விபத்தின் போது டிவிஎஸ் இருசக்கர வாகனம் ஓட்டி சென்றார். அதன் பதிவு எண். TN 33 AT 8642. முருகன் எனக்கு தெரிந்தவர் தான். அவரும் என் ஊர் தான். என் கரும்பு கடையிலிருந்து 30 அடி தூரத்தில் விபத்து நடந்தது. கேசவன் தலைகவசம் அணிந்திருந்தார். முருகன் அணிந்திருந்தாரா என்று நான் கவனிக்கவில்லை. கேசவனுக்கு பின்னந்தலையில் அடிபட்டு பலத்த காயமானது. விபத்து சம்பந்தமாக நான் போலீஸ் புகார் கொடுக்கவில்லை. போலீசார் என்னை விசாரித்தார்கள். நான் விபத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் சரியல்ல. மனுதாரர் கேட்டுக்கொண்டதால் பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

3 ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:

விபத்து சாலையின் எந்த பக்கம் நடந்தது என்று நான் முதல் விசாரணையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நான் விபத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் சரியல்ல. மனுதாரர் கேட்டுக்கொண்டதால் பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

ஒப்பம்/-செல்வம் ஒப்பம்/-திரு.ந.பன்னீர்செல்வம்,

சார்பு நீதிபதி, சங்ககிரி.